மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகள் கவனத்தில் கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுகிய கால வினா எண்கள் 17 ம், 18-ம் ஒன்றாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

சந்தனமர ஏற்றுமதிக்கான தடை.

* குறுகிய கால வினா எண் 17.—திரு. ப. நெடுமாறன் : மற்றும் திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து சந்தனக்கட்டை ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசு விதித்திருந்த தடை அகற்றப்பட்டு விட்டதா ?

(ஆ) இது சம்பந்தமாக மத்திய அரசிடம் இருந்து வந்த பதில் என்ன ?

* குறுகிய கால வினா எண். 18 திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சந்தனமர ஏற்றுமதியை மத்திய அரசு தடுத்துள்ளதென்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் இதுப்பற்றிய விவரம் என்ன ?

(இ) தமிழக அரசு எடுத்துள்ள முயற்சி என்ன?

(ஈ) அதன் பலன் என்ன?

[குறுகிய கால வினா எண்கள் 17, 18 ஆகிய இரண்டிற்குமான விடை]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :—

(அ) ஆம்.

(ஆ) 1-4-80 முதல் மத்திய அரசு சந்தனமர ஏற்றுமதியை முழுமையாக தடை செய்துள்ளது.

(இ) தமிழக அரசு மத்திய அரசிடம் சந்தனமர ஏற்றுமதிக்கான தடையை முழுமையாக நீக்கும்படி கடித மூலமும், தந்தி மூலமும், நேரிலும் கேட்கப்பட்டது.

(ஈ) சந்தனமர ஏற்றுமதிக்கான தடையை நீக்க வேண்டியதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இந்தியப் பிரதமர் அவர்கள் முதல்வருக்கு அறிவித்துள்ளார்கள்.

திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயிருந்து சந்தனக் கட்டை ஏற்றுமதி தடை செய்யப்பட்டு விட்டது. அந்தத் தடையை நீக்க வேண்டு